(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 154.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஜூன் 10, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

26/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி மாணவர்கள் உள்ளடங்கும் வயதுப் பிரிவுகள் யாவை;

(iii) அத்தகைய மாணவர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

(iv) மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள பொதுவான காரணங்கள் யாவை;

(v) அது தொடர்பில் அரசாங்கம் வழங்கும் தீர்வுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கம் மேற்படி பிரச்சினை தொடர்பாக முறையான ஆய்வொன்றை மேற்கொள்ளுமா;

(ii) இன்றேல், அவ்வாறான ஆய்வொன்றை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1976/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாற்றுத்திறனாளிகளுக்காக வழங்கப்படும் மாதாந்த வாழ்வாதாரக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(ii) மாதாந்த மாற்றுத்திறனாளி கொடுப்பனவைப் பெறும் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவிற்காக புதிதாக விண்ணப்பிக்கக்கூடிய மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) ஒரு குடும்பத்தில் பல மாற்றுத்திறனாளிகள் இருக்கும்போது, அவர்களுள் வாழ்வாதாரக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளக்கூடிய நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாதாந்த வாழ்வாதாரக் கொடுப்பனவை வழங்கும்போது, தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக குறைந்த வருமானம் ஈட்டுபவர்களின் வருமான மட்டத்தைத் தீர்மானிக்கும் முறையியல் யாதென்பதையும்;

(iii) அஸ்வெசும அல்லது பிறிதேனும் வாழ்வாதாரக் கொடுப்பனவைப் பெறும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு மாற்றுத்திறனாளி கொடுப்பனவைப் பெறுவதில் தடையேதும் உள்ளதா என்பதையும்;

(iv) 2026 பாதீட்டின் மூலம் மாற்றுத்திறனாளி கொடுப்பனவை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மாற்றுத்திறனாளி கொடுப்பனவை எதிர்பார்க்கும் நபர்கள் காத்திருப்பு பட்டியலில் இருக்க நேரிடுமா என்பதையும்;

(vi) மாதத்தில் குறிப்பிட்ட தினத்தில் நாடளாவிய ரீதியில் மாற்றுத்திறனாளி கொடுப்பனவை வழங்குவதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்கும் சாத்தியம் உள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1989/2026

கௌரவ சந்தன தென்னகோன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இறுதியாக மேற்கொண்ட காட்டு யானைகளின் கணக்கெடுப்பிற்கமைய யானைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை-மனித மோதல்கள் பதிவாகின்ற மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) யானை-மனித மோதல்கள் காரணமாக 2025ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள காட்டு யானை இறப்புகளின் எண்ணிக்கை மற்றும் மனித உயிரிழப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) கல்கமுவ, எஹட்டுவெவ, அம்பன்பொல மற்றும் கிரிபாவ பிரதேச செயலகப் பிரிவுகளில் காட்டு யானைகளின் நடத்தையில் ஏதேனும் தனித்துவமான பண்புகள் கண்டறியப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி பண்புகள் யாவையென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

2036/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் கடந்த 20 வருட காலப்பகுதியில் ஏனைய அரச நிறுவனங்களுக்குக் கடன் வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அரச நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கடன் வழங்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் ஒவ்வொரு நிறுவன ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2025.12.31 ஆம் திகதியாகும் போது மேற்படி நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள கடன் எவ்வளவென்பதையும்;

(ii) நிலுவையிலுள்ள கடன் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலுவைக் கடன்களை அறவிடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2041/2026

கௌரவ பத்மசிரி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரோனா பெருந்தொற்றுக் காலப்பகுதியில் வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலைக்கும் பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கும் கொடையாளர்களினால் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த கொடையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு வழங்கப்பட்ட உபகரணங்கள் பற்றிய ஆவணமேதும் உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி உபகரணங்கள் மற்றும் அவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதையும்';

(v) மேற்படி உபகரணங்கள் வைத்தியசாலையின் பொருள் விவரப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்குரியதான பொருள் விவரப் பட்டியல் இலக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்கள் வேறு வைத்தியசாலை களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வைத்தியசாலைகள், வழங்கிய உபகரணங்கள் மற்றும் அவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) நன்கொடையாக கிடைக்கப்பெற்ற உபகரணங்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள உபகரணங்களின் எண்ணிக்கைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி அ(i) இல் இல் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் அக்காலப்பகுதியில் சேவையில் ஈடுபட்டிருந்த வைத்திய அத்தியட்சகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் மற்றும் 2 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— மாகாண சபைத் தேர்தல்கள் எந்த தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— மாகாண சபைத் தேர்தல்கள் எந்த தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவானது, தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2026 ஜனவரி 06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேட குழுவிற்கு வழங்கப்பட்ட கால எல்லை, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம், 2026 செப்தெம்பர் 17 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 7(1)(இ) மற்றும் பகுதி VI உடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருமானவரால் ஆக்கப்பட்டு 2026 ஜூன் 09 ஆம் திகதிய 2492/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2026 மே 28 ஆம் திகதிய 2490/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் மாலைதீவு குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையிலான 2025, யூலை மாதத்தில் கையொப்பமிடப்பட்ட பொருத்தனை தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 சனவரி 05 ஆம் திகதிய 2470/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 106 மற்றும் 78(ஆ) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் ஆக்கப்பட்டு 2026 மார்ச் 12 ஆம் திகதிய 2479/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*14.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

17.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.